அரசியல் மாநாட்டில் அண்ணாமலையார்

Phone No 4502 | Regd. No.M. 5458
விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (13—2—50) வெளியூர் (14—2—50) [இதழ் 167

அழுகுரல்!

இரங்கற்பாவில் தொடங்கி இதோபதேசத்தில் முடிவு!

—(0)—

கண்ணீர்த்துளி பெருக்கி குறைபாட்டைக் கக்கினர்!

—(0)—

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் "கனதனவான்கள்"!

"மாகாணமெங்கும் மதுவிலக்கை அமுலுக்குக்கொண்டு வர வேண்டுமென நாம் கிளர்ச்சி செய்கையில் இருந்த ஆர்வமும் உற்சாகமும் இன்று இல்லை என்பதை, வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டித்தான் வரும்.

உற்பத்திப் பெருக்க விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவோ செய்திருக்கலாம், ஆனால் நம் சக்தியை இந்தத் துறையில் உபயோகிக்கவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

தொழிலாளர்கள் நிலையை உயர்த்தப்பாடு படுவதை நாம் முக்கியமாகக் கருத வேண்டும். தொழிலாளர்கள் பற்றிய இந்திய சர்க்காரின் சட்டங்களில் பல ஏட்டளவில்தானிருக்கின்றன வென்பதை, வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

முதுமைப் பருவமடைந்த தொழிலாளர்களுக்கு பென்ஷன் அளிக்க எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை யென்பது வருந்தத்தக்க விஷயந்தான்.

நமது காங்கிரஸ் ஸ்தாபனத்தில் மற்றொரு குறைபாடு இருக்கிறது அது இளைஞர்களுடன் தொடர்பு கொள்ளாதது தான். இந்தக் குறைபாட்டால்தான் மாணவர்களைக் கம்யூனிஸ்டுகள் சுலபமாகக் கைக்குள் போட்டுக் கொள்வது சாத்தியமாயிருக்கிறது.

நாம் சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. நமது சக்தியும் தேவையும் பயனற்றதாகப் போனது ஏன்? நம்மிடத்திலுள்ள குறைகள்தான் நம் முயற்சி பலிக்காமல் போனதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்களிடமுள்ள குறைபாடுகள் மிகை படுத்திக் கூறப்பட்டாலும் காங்கிரஸ்காரர்களிடம் குறைகளே இல்லை யெனக் கூறிவிட முடியாது"

சென்னைத்தேனாம்பேட்டையில் பெப்ரவரி 11-ந் தேதி ஆரம்பமான 'தமிழ்நாடு அரசியல் மாநாட்டுக்குத் தலைமை தாங்கியதோழர் என். அண்ணாமலையவர்கள் தமது நீண்ட தலைமையுரையில் அடுத்தடுத்து கண்ணீர்ப் பெருக்குகளை வடித்தபோதெல்லாம் சிந்திய 'ஒப்பாரி உரைகள்' இவை! அண்ணாமலையாரின் தலைமையுரை பெரும்பாலும் அழுகையுரையாகவே இருந்திருக்கிறது. கூடியிருந்தோரின் பொறுமையைச் சோதிக்கக் கூடிய அளவிலமைந்ததான அப்பேச்சின் சொற்றொடர்கள் முடியுங் கட்டங்கள் பெரும்பாலனவும் "வருந்தத்தக்கதாகவும்", "குறைபடக் கூடியதாகவுமே" முடிந்திருக்கின்றன. தலைமைப் பேச்சின் போது வருந்திவருந்தி, குறைபட்டு—குறைபட்டு கைந்து பலித்து விட்டார் அண்ணாமலையார்!

அந்நிய ஏகாதிபத்தியத்தை "விரட்டியடித்துவிட்டு," 'ஆள வந்தோமே நாமே' என்று ஆட்சி பீடமேறி, இறுதியில் குடியரசும் ஸ்தாபித்து விட்டோமென்று 'குதூகலம்' அடிக்கும் சுயராஜ்ய சர்க்காரின், அரிய சாதனைகளை கூறவந்த அண்ணாமலையார் ஒன்றைக்கூட 'அகமகிழ்வோடு' கூறினாரில்லை. அதற்கு மாறாக 'அரும் பெரும் சாதனைகள்' பற்றிப் பேச வந்த ஒவ்வொரு கட்டத்திலும் வருத்தம் தெரிவித்தும், குறைபாட்டைக் குறிப்பிட்டும் முற்றுப்புள்ளிகள் வைத்துள்ளார்!

(காங்கிரஸ்) அரசியல் மாநாட்டுத் தலைமையுரையி...

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

முதலாளித்வ மண்ணில் முளைக்குமா பாட்டாளி நலத் திட்டம்?

பட்டினி-பசி அகல சமதர்மமே சிறந்த வழி

தோழர் சேப்ரகோவ் கருத்துரை

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பசி, பட்டினி ஆகியவற்றால் மக்களை மடியச் செய்யும் முதலாளித்வ பொருளாதாரத் திட்டத்தால் இனி பயனில்லை. சமதர்மப் பொருளாதாரத் திட்டம் நாளுக்கு நாள் வெற்றிபெற்று வருகிறது.

முதலாளித்வ நாடுகளில் முதலாளிகளின் ஏகபோக ஆட்சியையும், அரசியல் ஆதிக்கத்தையும் எதிர்த்து உழைப்பாளிகள் போர் தொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். அரசியற் சூதாடிகளும், கொள்ளையடிக்கும் விஞ்ஞானிகளுமே முதலாளித்வ பொருளாதாரத் திட்டத்தின் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கத் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றனர். இவை அனைத்தும் பொதுமக்களை ஏமாற்றும் போலிப் பொருளாதாரத் திட்டங்களாகும்.

முதலாளித்வ நாடுகளில் உற்பத்திச் சாதனங்களைத் தம் சுரண்டல் பேர்வழிகளிடமே சிக்கியிருக்கின்றன. இதனால் முதலாளிகள் லாபம் அடைவதுதான் கண்ட பலன். மார்க்கெட்டுகளைப் பிடிக்கும் போட்டியில் ஈடுபடுவதே முதலாளித்வ பொருளாதாரத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. கிடைக்கும் வருவாயும் சுரண்டல்காரர்களின் நலனுக்கே பங்கிடப்படுகிறது. உற்பத்திப் பெருக்கம் எனப்படுவது லட்சக்கணக்கான உழைப்பாளிகளின் வறுமையைப் போக்க முடியாத ஒரு கேலியாக அமைந்துவிடுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் முதலாளித்வத்தோடு தோழமை கொண்டு உலவுகிறது. அது குறைந்த கூலிக்கு வேலை செய்யத் தொழில் உலகை வற்புறுத்துகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழிக்க என்றும் முதலாளித்வம் விரும்பாமலிருப்பதற்கு இதுவே காரணம். இவை அனைத்தும் உற்பத்தியில் ஏகபோக உரிமையையும், நாட்டில் பஞ்சத்தையும் உண்டுபண்ணவே பயன்படுவனவா...

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

திபேத் மீது செம்படைப் பாய்ச்சல்!

—(0)—

லண்டன் வட்டாரங்களில் பரபரப்பு!

லண்டன், பிப் 12—

காலநிலை சரியானதுமே திபேத் மீது கம்யூனிஸ்டு படையெடுப்பு ஆரம்பமாகிவிடும் என்று செய்தி நியந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

13 வயதுள்ள பஞ்சென்லாமா சீக்கிரமே திபேத்தை 'விடுதலை' செய்யும்படி மாஸேதுங்கையும், கம்யூனிஸ்டு சேனாதிபதி சூடேயையும் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

திபேத் என்னதான் மலைப்பாங்கான நாடாக இருந்தபோதிலும், இதைக் கைப்பற்ற அதிககாலம் பிடிக்காது என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

இதைக் கைப்பற்றியபின், கம்யூனிஸ்ட் சீனாவில் சுயாட்சிபெற்ற சுதந்திர குடியரசாக திபேத் செய்யப்படலாம் என்று மாஞ்செஸ்டர்கார்டியன் ராஜதந்திர நிருபர் எழுதுகிறார்.

ஸ்டாலின்-மாசேதுங் பேச்சுவார்த்தை விளைவு

மஞ்சூரியாவின் எதிர்காலம் பற்றி "மாஞ்செஸ்டர் கார்டியன்"

லண்டன், பிப். 12—

மாஸ்கோவில் மாஸேதுங்கிற்கும் ஸ்டாலினுக்குமிடையே இரண்டுமாத காலமாக நடந்துவரும் பேச்சுவார்த்தைகள் பற்றி, எவ்விதத் தகவலும் வெளிவராததால் பற்பல வதந்திகள் கிளம்ப ஆரம்பித்திருக்கின்றன வென்று ஹாங்ஹாங் செய்திகள் கூறுகின்றன இந்தப் பேச்சுவார்த்தைகள் குறித்து "மாஞ்செஸ்டர் கார்டியன்" எழுதுகையில் மஞ்சூரியாவின் எதிர்காலம் பற்றி என்ன முடிவு செய்யப்பட்டது என்பது தெரியவேண்டும் என்றும், பேச்சுவார்த்தை முடிவுகள் வெளியிடப் படும்போது, இவ்விஷயம் மூடுமந்திரமாகவே இருந்தால் அது ஆச்சரியப்படத்தக்க விஷயமல்லவென்றும் எழுதியிருக்கிறது.

சூயஸ்ப் பகுதியில் ரூ 250,000 மதிப்புள்ள வைரப் பொருள்கள் பறிமுதல்

சூயஸ்கால்வாய் பிரதேசத்தில் ரூ. 250,000 மதிப்புள்ள வைரப் பொருள்களை எகிப்திய கடற்கரை போலீசார் கைப்பற்றியிருக்கின்றனர். மூன்று பேர்களில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். ஒருவர் தப்ப முயன்றபோது தண்ணீரில் விழுந்து மாண்டார்.

பாரிசவாயுவைக் குணப்படுத்தப் புது மருந்து

சிரியா மாணவர் கண்டுபிடித்திருக்கிறார்

லாஸேன் சர்வ கலாசாலையைச் சேர்ந்த சிரிய மாணவர் அப்துல் வகாப் எல்நூரி, மிகவும் நீண்ட நாளான பாரிசவாயுவையும் குணப்படுத்தும் புது மருந்து ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இம் மருந்து ஸ்விஸ் கண்ட்ரோல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ரத்தக் கொதிப்பைக் குணப்படுத்தும் மருந்தைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் நூரி இப்பொழுது முனைந்திருக்கிறார்.

ஐ. நா. வில் அரபுக்கள் மீது புகார்

மனிதவுரிமை பறிக்கப்படுவதாக யூதர்கள் குற்றச்சாட்டு

லேக்ஸக்ஸஸ், பிப். 12—

ஐ.நா. பொருளாதார சமூக கௌன்ஸிலில் இந்திய பிரதிநிதி தோழர் ஏ. ராமஸ்வாமி அவர்கள் தலைமையில் கூடியபோது, அரபு நாடுகளில் மனித உரிமை பறிக்கப்படுகிறதென்றும், இதற்காக உண்மையை நேரில் சென்று அறிய ஒரு கமிஷன் அனுப்ப வேண்டும் என்றும், இராக்கிலுள்ள யூதர்கள் நிலைமை மிக மோசமாக இருக்கிறதென்றும் யூத பிரதிநிதிகள் குறை கூறினர் அரபு பிரதிநிதிகள் யாரும் இக் கூட்டத்திற்கு வரவில்லை.

மாலை மணி

சென்னை 13—2—50 திங்கட்கிழமை

தெளிவுதரும் தீர்ப்பு

'பொதுஜனப் பாதுகாப்பு என்ற போர்வையில் அதிகாரிகள், சட்டத்தை மீறி, குடிமக்களின் சட்டபூர்வமான உரிமைகளை மறுப்பது அனுமதிக்கத் தக்கதல்லவென்று நாங்கள் கருதுகிறோம்

இவ்விதம் அனுமதித்தால், மிக மோசமான நிலைமை ஏற்பட்டுவிடும். கைது செய்யப்படுவோர்க்குச் சட்டத்தின்படி அளிக்கப்படவேண்டிய பாதுகாப்புகளை அளிக்காமலே, அவர்களைக் காவலில் வைத்துவிட்டு, போலீஸார் புலன் விசாரணை நடத்தலாமென்று ஆகிவிடும்.

இந்தக் காவற் கைதிகள் விஷயத்தில் எதிரிகளுக்குச் சட்டப்படி அளிக்கப்படவேண்டிய ஒவ்வொரு உரிமையும் மீறப்பட்டிருக்கிறது. போலீஸார் ஒருவரைத் தங்களுக்கு இஷ்டமான காலம் வரை காவலில் வைத்துவிட்டுக் குற்றப் பத்திரிகை தயாரிப்பதில் தாமதம் செய்து கொண்டிருக்க முடியாது.

ஆகவே இந்தக் காவற் கைதிகளை விடுதலை செய்கிறோம்"

என்று பம்பாய் உயர்நீதி மன்றம், 28 காவற்கைதிகள் செய்துகொண்ட விடுதலைக் கோரிக்கை மனுக்கள் (ஹேபியஸ் கார்பஸ் மனுக்கள்) மீது தீர்ப்பு கூறும்போது நீதி செலுத்தியிருக்கிறது. இவ்வழக்கில், உயர்நீதி மன்றத்தின நீதிபதிகள் பலராக உட்கார்ந்து மேற்கூறிய தீர்ப்பினை ஒரு மனதாக அளித்துள்ளனர்.

பம்பாய் மாநிலத்தில் அடக்குமுறை ஆட்சியின் அலங்கோலத் தன்மை எப்படி இருக்கிறது என்பதையும், பொது மக்கள் உரிமைகளைப் போலீஸ் அதிகாரிகள் எந்த அளவுக்கு முறையல்லாத முறையில் சென்று பறித்து வருகிருர்கள் என்பதையும், பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதிகளின் தீர்ப்பு தெள்ளத் தெளிய விளக்கி நிற்கின்றது. பம்பாய் நீதிபதிகளின் வாய் அடக்குமுறைச் சட்டத்தால் இன்னமும் அடைக்கப்படாத காரணத்தாலும், 'ஹேபியஸ் கார்பஸ்' மனுக்கள் மூலம் நிரபராதிகள் நீதிபெறலாம் என்ற முறைக்கு அழிவு ஏற்படாத காரணத்தாலும் மேற்கண்டவாறு தீர்ப்பு அங்கு அளிக்க வாய்ப்பு இருக்கிறது— நீதி சற்று நிலவ வழி ஏற்பட்டிருக்கிறது. பம்பாய் மாநிலத்தில் காவற்கைதிகள் என்ற போர்வையில், அடக்குமுறை ஆட்சியின் கீழ் மக்கள் படும் அவதிகளைப் போலவேதான், சென்னை மாநிலத்து மக்களும் அவதியுறுகின்றனர். என்ருலும், அங்கேயாவது நீதி பெற வழியிருக்கிறது; அந்தநீதியை கூட பெற முடியாதபடி சென்னை அரசாங்கம் நீதி மன்றத்தின் வாயில்களை அடைத்துவிட்டது. பம்பாயில் நிரபராதிகளாக உள்ள காவற்கைதிகள் நீதி பெற வசதியிருக்கிறது; அந்த வசதிகூட இங்கே மறுக்கப்பட்டுவிட்டது. இரண்டு இடங்களிலும் காங்கிரஸ் ஆட்சிதான்! காந்திய வழியில் செல்வோர்தான் ஆளவந்தார்களாக இருக்கின்றனர்!

எண்ண—எடுத்துக் கூற—பற்றுக்கொள்ள — நம்பிக்கை வைக்க—வழிபட எல்லோர்க்கும் உரிமையுண்டு என்றுதான் இன்றைய ஆளும் அரசாங்கத்தினர் பிரகடனம் செய்துள்ளனர். உள்ளபடியே அந்த உரிமைகள் எட்டில் இருக்கும் அளவுக்கு, நாட்டில் நடமாடவிடப்படவில்லை என்பதை, பம்பாய் தீர்ப்பில் காட்டப்பட்டிருக்கும் கருத்துக்களே இனிது விளக்கிக்காட்டும்.

" பொதுஜனப் பாதுகாப்பு என்ற போர்வையில், அதிகாரிகள் சட்டத்தை மீறி. குடி மக்களின் சட்டபூர்வமான உரிமைகளை மறுப்பது அனுமதிக்கத்தக்கதல்ல" என்று தீர்ப்புக் கூறியிருக்கிருர்கள் நீதிபதிகள் என்ருல், அவர்கள் அடக்குமுறை ஆட்சியின் நடவடிக்கைகள் கண்டு, எவ்வளவு வேதனையுற்றிருக்கிருர்கள் என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம்.

அந்நிய ஆட்சியில் பொது மக்கள் உரிமைகள் ஏகபோகமாகப் பறிக்கப்படுகின்றன, ஆகவே அந்த ஆட்சி அகறறப்பட்டால் மக்களுக்குநலவுரிமை வலங்கும் சொந்த ஆட்சி மலரும் என்று நம்பிதான், ஆயிரக்கணக்கான விடுதலை வேட்கையுடைய வீரர்கள் போராட்டக் கிளர்ச்சிகளில் பங்கு கொண்டனர். அத்தகையோரின் உழைப்பு, உணர்ச்சி, உத்வேகம் எல்லாம் இன்றைய அடக்குமுறை ஆட்சிகளால் புறக்கணிக்கப்படுகின்றன என்ருல் மிகையாகாது. சுதந்தர கீதத்தின் ஓசை கேட்டு அதில் மயங்கி நிற்கும் எண்ணற்ற இளம் வீரர்கள், நாட்டில் நடக்கும் நடவடிக்கைகளின் உண்மை நிலையை அறிய மறுக்கின்றனர். மயக்கம் நீங்கிய பிறகு அவர்களது சிந்தனை தெளிவடையும், என்ற நம்பிக்கைநமக்கிருக்கும் காரணத்தால் தான், பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதிகளின் தீர்ப்பை, விடுதலை வேட்கையுடையோர் அனைவர் முன்னிலையிலும் பார்வைக்காக வைக்கிறோம்; குறிப்பாகத் தேசியத் தோழர்களைக் கண்டு தெளிவடையக் கோருகிறோம்.

பம்பாய்த் தீர்ப்பு இன்றைய ஆட்சியின் நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே தான், நாட்டின் உண்மை நிலையை அறிந்து, அடக்குமுறைக் கொடுமைக்கு நிரபராதிகள் எப்படி உள்ளாக்கப்பட்டிருக்கிருர்கள் என்பதைத் தெரிந்து, நடப்பது அடக்குமுறை ஆட்சியா, அல்லது அகிம்சை ஆட்சியா என்பதைக் கண்டு தெளிவடையும் பொருட்டே இத்தீர்ப்பை விடுதலை வேட்கையாளருக்குக் காணிக்கையாகச் செலுத்துகிறோம்.

சிவகங்கைக்கு அண்ணுத்துரை வருகை

சிவகங்கை தி. மு. கழகச் சார்பில், 14-2-50 செவ்வாய் மாலை 6-மணிக்கு "இராமச்சந்திரன் நினைவுப் பூங்கா" முன் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

தோழர்கள்

சி. என். அண்ணுத்துரை எம்.ஏ

என். வி. நடராசன்

சொற்பொழிவாற்றுவர்.

பிரிட்டனில் இந்தியப் பத்திரிகாசிரியர்கள்

லண்டன், பிப் 12—

பிரிட்டிஷ் வாழ்க்கையை நேரில் தெரிந்துகொள்வதற்காக அழைக்கப்பட்ட இந்திய பத்திரிகாசிரியர்கள் லண்டன் வந்து சேர்ந்துவிட்டனர்.

இவர்கள் சென்னைத் தோழர் காசா சுப்பராவ், பம்பாய் 'ஆஜ்மல்' ஆசிரியர் எம். ஹாரிஸ், பம்பாய் 'லோகமான்யா' ஆசிரியர் தோழர் பி. வி. கட்டில், கல்கத்தா ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டைச் சேர்ந்த தோழர் சுசங்கசுவாலா ஆகிய நால்வர் பிரிட்டிஷ் இன்பர்மேஷன் புதுடில்லி கிளையைச் சேர்ந்த உதவி ஆசிரியர் சானல் தோழர் ஆர். என்பாய் இவர்களுடன் சுற்றுப்பிரயாணம் செய்கிருர்.

பிரிட்டனில் தேர்தல் நிலைமை, தொழிலாளர் நிலைமை, கல்வி வசதி முதலிய பல விஷயங்களையும் இவர்கள் நேரில் தெரிந்து கொள்வர்.

இவர்கள் 6 வாரகாலம் பிரிட்டனில் சுற்றுப்பிரயாணம் செய்யத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. முதன்முதலில் லண்டன் பத்திரிகாலயங்களுக்குச் செல்வதுடன் இவர்களின் சுற்றுப்பிரயாணம் ஆரம்பமாகும். பின்னர் ஸ்காட்லாண்டுயார்டுக்குச் செல்வர்.

கேம்பிரிட்ஜ் இஸ்லிக்கில் விவசாய இயந்திரங்களின் தயாரிப்பை இவர்கள் பார்வையிடுவர். பின்னர் நியூகேஸில் சென்றுவிட்டு ஸ்காட்லாந்திலுள்ள நிலக்கரி சுரங்கங்களுக்கு அழைத்துச்செல்லப்படுவர். டண்டி சணல் ஆலை கிளைட் நதிதீரத்திலுள்ள கப்பல்கட்டும் தளம், மாஞ்செஸ்டரில் பருத்திஆலை பாமிங்காம் தொழிற்சாலைகள் ஆக்ஸ்போர்ட் மோட்டார் பாக்டரி மாஞ்செஸ்டர் கார்டியன் காரியாலயம் முதலியவைகளைப் பார்வையிடுவர்.

மீண்டும் லண்டன் வந்தபின் பார்லிமெண்ட்சபை பிலிம் ஸ்டுடியோ பள்ளிக்கூடங்கள் முதலியவைகளைப் பார்வையிடுவர்.

அறிவுக் கதிர்!

"நீ என்னுடைய உடைமை" என்று 'அதிகாரம்' உலகைநோக்கி சொல்லிற்று. அப்படிச்சொன்ன அதிகாரத்தை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தி சிறைக்கைதியாக்கிவிட்டது உலகம்.

நான் உன்னுடைய உடைமை என்று 'உலகை நோக்கி அன்பு சொல்லிற்று. உலகம் 'அன்பு'க்கு சுதந்திரம் வழங்கிற்று.

—தாகூர்

அரசியல் மாநாட்டில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காங்கிரஸ் சர்க்கார் சாதனைகள் பற்றிய குறிப்புக்களில் வருத்தமும்—குறைபாடும்! 'சுத்த சுயராஜ்ப சுதந்தர சர்க்காரின்' சுபீட்ச ஆட்சிப் பற்றிப் பின்னிப் பின்னிப் பல முறை குறிப்பிட வந்த இடங்களனைத்திலும் 'வருத்தம்'—'குறைபாடு' ஆகிய இரண்டை மட்டுமே இணைத்துப் பிணைத்துப் பேசியுள்ளார் அண்ணுமலையார்! "பழுத்த தேச பக்தர்—தியாகத் தழும்புகள் ஏற்றவர்" என்று தன்னைத் தானே கூறிக்கொள்ளத் தயங்காத, தவருத தோழர் அண்ணுமலையாருக்கே இயலவில்லை 'பூலோக கைலாசம்' படைக்க வந்தப் புண்ணிய புத்திரர்கள்புரிந்த நற்காரியமொன்றை எடுத்தோத! சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும் என்ற உண்மை மொழி எக்காலத்துக்கும் எவருக்கும் ஒத்ததுதானே!

பழம்பெருமையிலேயே புரண்டு புரண்டு, தண்டால்—கர்ணம்—பஸ்கிபோட்டு பொதுமக்களை மேலும் பல காலத்துக்கு ஏமாற்றிவர முடியாது—மக்கள் ஏமாருர் என்ற கருத்தும் நட்பும் நாட்டில் உருப்பெற்று— வலுப்பெற்றுவிட்டதையொட்டி, அண்ணுமலையார் போன்ருரின் 'அரசியல்' பிரசங்கங்கள் இவ்வண்ணம், ஆளவந்தாருக்கு ஆட்டங்கொடுக்கும்' தன்மையில் அமைவதில் ஆச்சரியமொன்றில்லை.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் எதிர்காலம் எப்படியிருப்பினும், காங்கிரஸ் போர்வையில இதுவரை இருந்து வந்திருப்போருக்கு ஒரு 'நல்ல காலம்' வேண்டியிருக்கிறது! தேர்தலும் நெருங்கிவிட்டது! மக்களை வேறு சந்தித்தாகவேண்டும்! மக்களை மன மகிழ வைக்கும் இரண்டொரு நல்லவார்த்தைகளைப் பிரயோகிக்க இதுவே 'நல்ல தருணம்'! அண்ணுமலையார்கள் அதை உணர்ந்துதான் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிருர்கள்! அதற்கொரு 'சாம்பிளே' இது!

ரொட்டி தயாரிக்க சேர்க்கும் திரவம் ஆபத்தானதா?

லண்டன், பிப். 11—

ரொட்டியை வெண்மையாகவும், லேசானதாகவும் தயாரிக்க அஜ்னே (நைட்ரோஜன் டிரை குளோரைட்) என்ற திரவத்தை உபயோகிப்பது ஆபத்தானது என்று, பிரிட்டிஷ் மெடிகல் ஆராய்ச்சி கௌன்ஸில எச்சரித்திருக்கிறது.

பிரிட்டனிலும் அமெரிக்காவும் இந்தத் திரவம் ரொட்டி தயாரிப்பதில் உபயோகப் பட்டு வருகிறது. இத்திரவம் கலந்தமாவினுல் செய்யப்பட்ட பிஸ்கட்டுகளை நாய் உண்டதும் அவைகளுக்கு ஹிஸ்டீரியா ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் திரவம் கலந்த மாவினுல் செய்யப்பட்ட ரொட்டி சாப்பிட்டதினுல்தான் பிரிட்டனின் மக்களிடையே வயிறு கோளாறு சம்பந்த வியாதிகள் ஏற்பட்டன வென்று கூறப்படுகிறது. ரொட்டி தயாரிப்பதில் இத் திரவத்தை இனி உபயோகிக்கக்கூடாது என்று யுனைடெட்ஸ்டேட்ஸ் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

பிலிம் தணிக்கை

நியூயார்க், பிப். 12—

பிலிம் தணிக்கை போர்ட் செய்யும் முடிவு சட்டப்படி செல்லக்கூடியதா என்கிற பிரச்னை யுனைடெட்ஸ்டேட் சுப்ரீம் கோர்ட்டின் தீர்மானத்திற்குவிடப்படும் எனத் தெரிகிறது.

இப் பிரச்னையை கோர்ட்டு வரை சென்று தீர்த்துவிடுவது என்ற நோக்கத்துடனேயே ஹயிடிரோச்மாண்ட் என்கிற பட உற்பத்தியாளர் நீக்ரோவர்கள் வாழ்க்கை சம்பந்தப்பட்ட சித்திரமிர் படம் ஒன்றைத் தயாரித்திருக்கிருர்.

'லாஸ்ட் பவுண்டரீஸ்' என்ற இப் படத்தை ஜியார்ஜியாவிலுள்ள அட்லாண்டா பிலிம் தணிக்கையாளர்கள் தடுத்துவிட்டனர், இது சட்ட ரீதியானதல்ல என்று ரோச்மாண்ட் ஜியார்ஜியா ஜில்லா கோர்ட் முன் வழக்கு தொடர்ந்திருக்கிருர்.

இவ் வழக்கை யுனைடெட்ஸ்டேட் சுப்ரீம் கோர்டு விசாரிக்கவிருக்கிறது. இதன் முடிவு என்ன என்பதை ஹாலிவுட் முழுவதுமே உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

சட்டப்படி படம் பொது மக்களுக்கு காட்டப்படுமுன் 70 நகரபோர்டுகளைச் சேர்ந்ததணிக்கையில் படத்தைப் பார்த்து அனுமதிக்க வேண்டும். இதற்காக ஹாலிவுட் வருஷத்திற்கு ரூ. 22,75,000 பணம் கட்டுகிறது. தணிக்கையாளர் அனுமதித்துவிட்டால் பின்னர் படங்கள் மீது குற்றம் இருந்தாலும் காட்டமுடியாது.

ரோச்மண்ட் வழக்கு தோற்ருல் தணிக்கை போர்டு அநாவசியமான விஷயங்களில் எல்லாம் தலையிடுமோ என்று ஹாலிவுட் பட உற்பத்தியாளர்கள் பயப்படுகின்றனர்.

பிரிட்டனில்

பிரிட்டனில் பிலிம் தணிக்கைப் போர்டிடம் பட முதலாளிகள் தாங்களாகவே காட்ட முன்வருகின்றனர். தணிக்கையாளர் படங்களைப் பார்த்துவிட்டு 'இவைகளை காட்டலாம்' 'இவைகளைப் பெரியவர்கள் மட்டும்தான் பார்க்கலாம்' இவைகள் யாரும் பார்க்க லாயக்கற்றது என்று அபிப்பிராயம் அளிக்கின்றனர். இதன் மீது படங்களில் சில சீர்திருத்தங்கள் செய்து அனுமதிக்க ஸ்தல கமிட்டிகளுக்கு அதிகாரமுண்டு. —குளோப்.

'ஸ்வோர்ட் ஆப்டெசர்ட்' படம் காட்டுவது நிறுத்தப்பட்டது

லண்டன், பிப். 11—

ரீஜெண்ட் தெருவிலுள்ள பிகாடிலி ஸினிமாவில் திரையிடப்பட்ட யூதபிரசாரப் படமான 'ஸ்வோர்ட் ஆப் டெஸர்ட்' முதல் காட்சியின்போது ஏற்பட்ட ஆர்ப்பாட்டத்தின் விளைவாக லண்டன் கௌண்டி கௌன்ஸில் உத்திரவின்பேரில் நிறுத்தப்பட்டுவிட்டது.

இப்படம் மூன்று வாரங்கள் ஓடிக்கொண்டிருந்தது. இப்படத்தின் போஸ்டர்களையும் பேனர்களையும் எத்தனையோ தெருவில் கூடியிருந்த ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்- இப்படம் பிரிட்டிஷ், அரபு எதிர்ப்பு பிரசாரம் என்று கூறப்படுகிறது.

ஜெருசலம் எதிர்காலம்

ஜினிவா, பிப். 12—

ஜெருசலத்தை சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது குறித்த விவாதிக்க இஸ்ரேலையும் ஜார்டனையும் அழைப்பதென்று ஐ. நா. தர்மகர்த்த கௌன்ஸில் முன்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அக்கௌன்ஸில் உள்ள ஒரேஒரு அரபு பிரதிநிதியான சிலிப் பிரதிநிதியும், ஸிரியா மேற்பார்வையினர்களும் இந்த யோசனையைத் தீவிரமாக எதிர்த்தனர். இஸ்ரேல் அழைப்பை ஏற்கும் எனத் தெரிகிறது.

இராணுவத்துணையோடு யதேச்சதிகாரம் எத்தனைநாள் நீடிக்கும்?

யு.எஸ்.-ஸின் செல்லப்பிள்ளை சியாங்கேஷேக் நிலை தெரிவீர்!

நல்லறிவுப் பிரசாரத்துக்குத் தடைவிதிப்பது நாணயமா?

வாடிப்பட்டியில் பொதுச் செயலாளர் பேச்சு

(நமது தனி நிருபர்)

வாடிப்பட்டி, பிப். 8—

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை, அமைப்புக்குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் ஆகியோர் இன்றுமாலை 6-மணிக்கு சோளவந்தானிலிருந்து இங்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களைவாடிப்பட்டி திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், பொதுமக்களும் வெகு உற்சாகமாக வரவேற்று, நன்கு அலங்காரம் செய்யப்பட்டிருந்தமேடைக்கு அழைத்துச் சென்றனர்.

அண்ணாத்துரையின் பேச்சைக்கேட்க மிகவும்ஆவலோடு கூடியிருந்த மக்கள்அனைவருக்கும், அவரின் பேச்சு நன்ருகக் கேட்கும் வண்ணம் பல ஒலிபெருக்கும் கருவிகள் இணைக்கப்பட்டிருந்தன. கூட்டத்திற்குச் சுமார் பத்தாயிரம் மக்கள் வந்திருந்தனர். நகர் முழுவதும் இயக்கக் கொடிகளால் நன்கு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

பின்னர் 6-30 மணிக்குப் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. கூட்டத்திற்குத் தோழர் பி. வெங்கிடசாமி (ரெட்டியார்)தலைமைவகித்து பொதுமக்கள் அனைவரும் மிக அமைதியாக இருந்து தோழர் அண்ணாத்துரையின் பேச்சைக் கேட்டுப் பயனடைய வேண்டுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

என். வி. நடராசன்

பின்னர் தோழர் என். வி. நடராசன் பேசினர். அதுபோது அவர் குறிப்பிட்டதாவது:—

இன்று எங்கு பார்த்தாலும் பஞ்ச நிலை தாண்டவமாடுகிறது. பொருளாதார நெருக்கடியோ சொல்லமுடியவில்லை. பருவ மழை மக்களைச் சோதனை செய்கிறது. இந்த நிலையில் நமது சர்க்கார் என்ன செய்கிறது என்று பார்த்தால், தொழிலாளர் மீது அடக்கு முறைப் பாணத்தைப் பிரயோகம் செய்கிறது. மேல் நாடுகளில் எல்லாம் மழை இல்லை என்ருல், விஞ்ஞானத்தின் உதவியைக் கொண்டு, வேண்டும் போது வேண்டிய அளவு மழையை உண்டுபண்ணுகிருர்கள். ஆனல் இங்குள்ள சர்க்கார் மழைக்காக வருண ஜெபம் செய்ய அனுமதித்து ஆதரவும் தருகிறது.

திறமை அற்ற சர்க்கார்

இன்றைய சர்க்கார் சகல விஷயத்திலும் திறமை அற்ற சர்க்கார் என்று பல தலைவர்கள் கூறுகிருர்கள் வங்கத்திலே சரத்சந்திரபோஸ் இன்றைய சர்க்காரின் போக்கைக் கண்டிக்கிருர். காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ஆச்சார்யகிருபளானியும் கண்டிக்கிருர், எம். என். ராய், மற்றும் பல தலைவர்கள் எல்லாம் கண்டிக்கின்றனர்.

அதைப்போலவே தான் தென்னாட்டிலே தி. மு. கழகமும் இந்த சர்க்கார் செய்யும் பல தவறுகளைக் கண்டித்து இந்த சர்க்காருக்குத் திறமை இல்லை என்கிறது.

இதைச் சொல்வதால் திறமையற்ற சர்க்காரை நீக்கி விட்டு, அந்த இடத்தில நாங்கள் அமரவேண்டுமென்பது அல்ல பொருள். இவர்களே ஆளட்டும் ஆனல் அந்த ஆட்சி தொழிலாளர்களின் உள்ளத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். 1947-ல் ஆகஸ்ட் சுதந்திரத்தின் போது மக்கள் எவ்வளவு உற்சாகமாகக் கொண்டாடினர்களோ, அந்த உணர்ச்சி, "குடி அரசு" ஆன பிறகு இல்லையே! காரணம் என்ன?

சென்னை மாகாணம் ஓர் பஞ்சாயத்து போர்டே

இன்றைய ஆட்சியாளர்களின் திட்டப்படி சென்னை மாகாணம் ஓர் பஞ்சாயத்து போர்டாக ஆக்கப்பட்டுள்ளது. சுமார் 70 லட்சம் மக்களைக் கொண்ட இலங்கை சர்க்காருக்குள்ள உரிமைகூட நமது மாகாணத்திற்கு இல்லையே! இங்கு நாம் ஏறக்குறைய நாலரைக்கோடி பேர் வசிக்கிருேம். நமது நாட்டு மக்களுக்குத் தேவையான கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றை நாமே செய்துகொள்ள உரிமையில்லையே. இதற்குப் பெயர்தான் குடி அரசா? ஒரு இலங்கை சர்க்காரின் சேனநாயகாவிற்கு உள்ள உரிமை, நமது பிரதமர் குமாரசாமி ராஜாவிற்கு ஏன் இல்லை?

இந்த நாட்டிற்கு எது செய்ய வேண்டுமானலும் "அனுமானில்" (விமானம்) சென்று மேலிடத்தாரின் அனுமதி பெற்றுத்தானே செய்ய முடிகிறது! இந்த நிலை மாற வேண்டும் என்றுதான் தி. மு. கழகம் சொல்கிறது.

அடக்குமுறை வேண்டாம்

இதைப் பொது மக்களிடம் சொன்னல் எங்கள் கூட்டங்களுக்குத் தடைவிதிக்கிறது அரசாங்கம். 'குடி அரசு' தினத்தன்று எங்கள் கொடிகளை இறக்கி இறக்கிறது போலீஸ் நிர்வாகம், இதெல்லாம் ஏன்? இன்று அதிருப்தியும், குழப்பமும் காங்கிரசில் கூட தலைவிரித்தாடுகிறது கவர்னர் ஜெனரல் சி. ஆர். இன்று வீட்டிற்கு அனுப்பப்பட்டதே இதுதான் காரணம். எனவே, சர்க்கார் மக்களுக்குத் தேவையான காரியத்தைச் செய்யவேண்டுமே ஒழிய, அதைவிடுத்து அடக்குமுறை தர்பாரை நடத்திக் கொண்டிருந்தால், அந்த நிலை இனியும் நீடிக்காது என்று எச்சரிக்கை செய்கிறேன். அடக்கு முறை ஆட்சி செய்த பல அரசாங்கங்கள் இருந்த இடம்தெரியாமல் மறைந்துவிட்டன எனவே இதைக் கண்டாவது இனிமேலும் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளுங்கள் என்று நான் அரசியலாருக்குத்தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணாத்துரை பேச்சு

பின்னர் நீண்ட ஆரவாரத்தினிடையே பொது மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு தோழர் அண்ணாத்துரை பேசியதின் சுருக்கம் வருமாறு:—திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி சிறிது காலத்தில் நூற்றுக் கணக்கான கிளைக் கழகங்களும், சுமார் 50-க்கு மேற்பட்ட பிரச்சாரகர்களும் தோன்றி இருப்பதே மிகவும் மகிழ்ச்சிக் குரியது.

பெரியாரின் திருமணத்தால் தான் நாங்கள் வேறுபட்டோமே அன்றி மற்றக் கருத்துக்களால் அல்ல. இந்த வேறுபாட்டைக் கொண்டு எங்களுக்குள் பேதமாகிவிட்டது, இனி அண்ணாத்துரை காங்கிரசிலே சேர்ந்துவிடுவார் என்று யாராவது நினைத்தால் அவர்கள் நிச்சயம் ஏமாறுவார்கள்.

பகை இல்லை; நட்புதான்!

திராவிடர் கழகம், தி. மு. கழகம் இரண்டுக்கும் பகை இல்லை. நான்தான் திராவிடர் கழகம் என்ற பெயரைச்சூட்டினேன். எனவே கடைசியில் திராவிடர் கழகம் என்னிடம் தான் வந்தடையுமே தவிர வேறு யாரிடமும் செல்ல முடியாது. தகப்பனேடு கோபித்துக்கொண்டு தனிக் குடித்தனம் செய்யும் பிள்ளைகளைப் போன்று இன்று நாம் இருக்கிருேம். குடும்பத்தைத் திறமையாக நடத்த முடியும் என்ற எண்ணம் தகப்பனுருக்கு உண்டாகும்போது எல்லாப் பொருள்களையும் நம்மை அழைத்து நம்மிடமே ஒப்படைத்துவிடுவார். ஆகையால் நமக்கும், திராவிடர் கழகத்திற்கும் மோதுதல் இருக்க நியாயமே இல்லை. அதுமட்டுமல்ல எங்களுக்குள் கருத்து வேறுபாடுகளும் இல்லை. எங்கள் வேறுபாடு காமராஜருக்கும், சி. ஆருக்கும் உள்ள கருத்து வேறுபாடு போன்றதல்ல. பழனிக்குச் சென்று அபிஷேகம் செய்யாதே என்று தலைவர் சொல்ல, அதைச் செய்யுங்கள் என்று நாங்கள் சொல்லவில்லையே.

ஜாதி முறை ஒழியவேண்டும்

இந்தியாவில் ஜாதி முறைகள் தலைவிரித்தாடுகின்றன அமெரிக்காவிலோ, இங்கிலாந்திலோ, பிரான்ஸ் தேசத்திலோ, அல்லது ஜப்பானிலோ இதுபோன்ற ஜாதி முறைகள் இல்லை. ஆனல் துர்ப்பாக்கியமான இந்தத் தேசத்தில்தான் நாயக்கர், படையாச்சி, செட்டியார் போன்ற பல பிரிவுகள் இருக்கின்றன. இவைகள் ஒழிக்கப்படவேண்டும் இந்த வேலையைத்தான் தி. மு. கழகம் செய்துகொண்டு வருகிறது. சர்க்காரை நடத்தவோ, மந்திரி பதவியைப் பிடிக்கவோ, சட்ட சபை மெம்பராகவோ, தேர்தலில் பிரவேசிக்கவோ நாங்கள் விரும்பவில்லை என்று தீர்மானித்துள்ளோம். அப்படி இருக்க வீணாக இந்த சர்க்கார் எங்கள் மீது கோபம் கொள்வது ஏன்?

தேர்தலில் கலந்துகொள்ளவில்லை மற்றும் சர்க்காரைக் கைப்பற்ற உத்தேசமில்லை என்ருல் இப்படி ஒரு கட்சி தேவையா என்று கேட்கலாம்?

மாட்டுக்கு மூக்கணாங்கயிறு தேவைப்படுவது போன்று, காருக்கு "பிரேக்" தேவைப்படுவது போன்று, தான் நாங்கள் வேலை செய்கிருேம். கட்டுப்பாடின்றி செல்லும் மாட்டை நிறுத்த அந்தக் கயிறு எப்படிப் பயன் படுகிறதோ, அவசரகாலத்தில் வண்டியை நிறுத்த எப்படி பிரேக் பயன்படுகிறதோ அது போன்று தவருக செல்லும் சர்க்காரை இப்படி செய் என்று சொல்வதற்காகவே நாங்கள் வேலை செய்கிருேம் இதில் தவறு இருக்கமுடியாது.

சியாங் நிலை புணர்ந்து திருந்துக

இவைகளைச் சொன்னல் எங்களை சர்க்கார் கண்டிக்கின்றனர். இதுகளுக்கு வேறு வேலை கிடையாது என்று சொல்கிருர்கள்; ஆனல் இது போன்ற ஆணவம் நிலைத்து நின்றதில்லை இன்று நேரு அவர்கள் இதைக் கண்முன் காண்கிருர். அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக வாழ்ந்தார் சியாங்கேஷேக். அவருக்கு ஆதரவாக கோமிங்டாங் கட்சி, இதை நாட்டிலே பரப்ப பல பத்திரிகைகள். ஆனல் இன்று சியாங்கேஷேக் கதி நினைக்கக்கூடமுடியவில்லை. அவர் என்ன ஆனர் என்பதே தெரியவில்லை எனவே, இதைப் பாடமாகக் கொண்டு, ராணுவத்தையே துணையாகக்கொண்டு ஆட்சி நடத்துபவர்கள் இதை உணர வேண்டும்.

ஆற்றல் இல்லையா?

நாங்கள் நாட்டிலே செய்யும் பிரச்சாரத் தொண்டு தவறுதலாக இருப்பின், எதிர்த்து எழுதுங்களேன். உங்களிடம் உள்ள பத்திரிகைகள் என்ன செய்கின்றன? எழுதமுடியவில்லையா,அல்லது எழுத ஆற்றல் இல்லையா? உங்களிடம் பத்திரிகைகள் ஏராளம், ரேடியோ மற்றும் பிரச்சார சாதனங்கள் அனந்தம் இவ்வளவு இருந்தும் அண்ணாத்துரையின் "ஆரிய மாயை"யால் ஆட்சியே ஆட்டங் கண்டுவிடுமென்ருல் அது என்ன அவ்வளவு போலியானதா? இதை விடுத்து வீணாக எங்கள் பத்திரிகைகளுக்கு ஜாமீன், புத்தகங்கள் பறிமுதல், நாடகங்களுக்குத் தடை என்றே போய்க் கொண்டிருந்தால இதை நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க இனி முடியாது.

அசோகன் காலத்தில்......!

அசோகன், சிவாஜி, அக்பர், ஔரங்கசீப், கனிஷ்கர் காலத்தில்கூட விந்திய மலைக்குத் தெற்கே அவர்கள் ஆட்சிவந்ததில்லை. ஆனல் இன்று வடநாட்டானின் ஆட்சி இங்கு தங்கு தடை இன்றி நடைபெறுகிறது உழைத்து உருக்குலைந்துபோன தமிழன் தனது செல்வத்தை வடநாட்டானுக்குத்தந் தவிட்டு,அவன் மலேயா சென்று கங்காணியிடம் கசையடி பெறுகிருன். தமிழனுக்குத் தமிழகத்திலே தங்க இடவசதி செய்யவேண்டும். இதற்காக ஓர் எல்லைக்கோடு தேவை. அதுதான் திராவிடநாடு திராவிடர்க்காக வேண்டுமென்பது. இதிலே மாணவர்கள், ஆசிரியர்கள், வாலிபர்கள் எல்லாம் கட்சி மனப்பான்மை காட்டாது சேர்ந்து அதற்காக வேலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வேலையைச் செய்ய நமது இயக்கத்தைத் தவிர வேறு ஒரு இயக்கமும் முன் வரவில்லை. எனவே எல்லோரும் தி. மு. கழகத்தில்சேர்ந்து கூடிய விரைவில் ஒரு லட்சம் அங்கத்தினர்களைச் சேர்த்துத் தரவேண்டுகிறேன்" என்று பேசி முடித்தார்.

தோழர்கள் அண்ணாத்துரை நடராசன் ஆகியோருக்கு அழகாபுரி திராவிட முன்னேற்றக் கழகம், ஆண்டிப்பட்டி தி. மு. க. ஆகியவை சார்பில் மலர் மாலைகளும், வரவேற்பு இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன,

பின்னர் தலைவர் நன்றிகூற கூட்டம் இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது. உடனே தலைவர்கள் காரில் நிலக்கோட்டைக்குப் பயணமானர்கள்.

ஜோஹன்னஸ்பர்க் பத்திரிகை மீது மலான் பாணம்!

கேப்டவுன், பிப். 10—

தென்னாப்பிரிக்காவில் ஐரோப்பியர்களுக்கும், சுதேசிகளுக்கு மிடையே விரோத மனப்பான்மையைத் தூண்டிவிடக்கூடிய ஒரு கார்ட்டூனை பிரசுரித்ததற்காக "சண்டே எக்ஸ்பிரஸ்" என்ற ஜோஹென்னஸ்பர்க் பத்திரிகையின் ஆசிரியர், மானேஜர், கார்ட்டூனிஸ் இவர்கள் மீது வழக்கு பதிவு செய்து ஸம்மன்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

சுதேசி நிர்வாக (1939) சட்டத்தின் கீழேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்றும், இம்மாதிரி நடவடிக்கை எடுப்பது இதுவே முதல் தடவை என்றும் கூறப்படுகிறது.

இந்த வழக்கு மார்ச்சு மாத ஆரம்பத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆக்ஸ்போர்ட்டில் படிக்கும் மாணவர்களுக்குக் கட்டுப்பாடுகள்

லண்டன், பிப் 9—

ஆக்ஸ்போர்டில்படிக்கும்மாணவர்கள் பொதுகுடிக்கும் இடங்களுக்கு செல்ல இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றனா. ஆனல் அத்துமீறியோ முரட்டுத்தனமாகவோ நடந்துக்கொண்டால் அவர்கள் தண்டிக்கப்படுவர்.

ஆக்ஸ்போர்ட் 'அகடமிக்' உடை அணிந்து சிகரெட் பிடிப்பதில்குற்றமில்லை என்ருலும் அம்மாதிரிசெய்வது சரியல்ல அரசியல் கூட்டங்களில் மாணவர்கள் கண்டிப்பாகக் கலந்துகொள்ளக்கூடாது.

தி. மு. கழகக் கூட்டங்கள்

14—2—50

திருப்புவனம் (காலை) :— சி. என். அண்ணாத்துரை, என் வி. நடராசன்.

சிவகங்கை (மாலை) :— சி. என். அண்ணாத்துரை, என் வி. நடராசன்.

முதலாளித்வ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும். எனவே, முதலாளித்வமும், பொருளாதாரத் திட்டம் வகுத்தலும் ஒன்றுக்கொன்று பொருந்தி வருவன வாகா.

வரையறுக்கப்பட்ட ஒரு திட்டத்தை உணர்த்தும் முறையிலே தோழர் ஜே. வி. ஸ்டாலின் தொழில் முறையில் முதலாளித்வமல்லாத ஒரு சமதர்மத்திட்டம், அல்லது தேசிய மயமாக்கப்பட்ட தொழில்முறை, தேசிய கடன் திட்டம், தேசீய நலத்திட்டம், கிராமங்களோடு சமதர்ம அடிப்படையில் ஒருவித ஒத்துழைப்பு, நாட்டில் உழைப்பாளிகளுக்கு செல்வாக்கு இன்னபிற பலன்கள் இருக்க வேண்டும் என்கிறார்.

முதலாளித்வப்பாதுகாவலர்கள் ஜனநாயக முதலாளித்வம் என்றும், ஜனநாயக சோஷலிசம் என்றும், ஏதேதோ பேசுகிறார்கள் ஆனால் இப்படிப்பட்டத் திட்டங்களால் வறுமை ஒழிக்கப்பட்டு விடும் என்று சொல்லி விட முடியாது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரத் திட்டம் எவ்வித பயனும் அளிக்காமல் முழுத் தோல்வியே அடைந்து விட்டது. ஐரோப்பிய பொருளாதாரக் கவுன்சில் போட்ட திட்டப்படி. மார்ஷல் உதவி பெற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பதிலாக, உற்பத்தியைக் குறைத்து விட்டது. கடந்த 40 ஆண்டுகளாக ஐரோப்பிய தொழில் உற்பத்தி ஒரே நிலையில்தான் இருந்து வருகிறது. ஆனால், அதே சமயத்தில் சோவியத் குடியரசில் தொழில் வளர்ச்சி முன்பிருந்ததைவிட ஒன்பது மடங்கு அதிகரித்துள்ளது சமீபத்தில் ஏற்பட்ட கரன்ஸி மதிப்புக் குறைவினால் ஐரோப்பாவின் பொருளாதார நிலை மேலும் சீர் குலைந்துவிட்டது

பொருளாதாரநிலையைச் சீர்படுத்துவதென்றால் கட்டுப்பாடுகளைச் செலுத்தும் வர்க்கம் எது? செலுத்தப்படும் வர்க்கம் எது என்ற பிரச்னை முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்றார் லெனின்.

ஒரு முறை செ. ஜி. வெல்சுடன் தோழர் ஸ்டாலின் பேசிக் கொண்டிருந்த போது, முதலாளித்வத்தை ஒழித்தாலன்றி, தனிப்பட்ட முதலாளிகள் வசம் உற்பத்திச் சாதனங்கள் இருக்கும்வரை நிலையான பொருளாதாரத்தை யாராலும் ஏற்படுத்த முடியாது என்றார்.

குழந்தையா? - வெடிகுண்டா?

வாழ்த்துத் தந்தியால் வந்த விபரீதம்!

ஆர்ஜெண்டினாவில் ஒரு பிரிட்டிஷ்காரருக்கு ஒரு குழந்தை பிறந்தது. இந்தப் பிறந்த செய்தியும், குழந்தையின் எடையின் விவரமும் பற்றி கேள்விப்பட்ட பிரேஸிலுள்ள அவருடைய நண்பர் குறும்பாக "ஏழு பவுண்ட் டைனமைட் வந்து சேர்ந்ததற்கு என் மகிழ்ச்சி" என்று தந்தி அடித்திருந்தார். அவர் சொல்ல விரும்பியது "ஏழு பவுண்டு குழந்தை உங்களுக்குப் பிறந்தது குறித்து மகிழ்ச்சி" என்பதுதான். இது ஏதோ வெடிகுண்டு பற்றி தான் இவ்விஷயம் என்று அதிகாரிகள் எண்ணி பிறந்த குழந்தையின் தகப்பனாரைச் சிறையில் வைத்துவிட்டார்கள். பின்னர் உண்மை வெளிவிட்ட பின், ஒருவாரம் கழித்து அவர் விடுவிக்கப்பட்டார்.

சென்னைக் கடலில் மீன் பிடிப்பு ஆராய்ச்சி

8-2-50 காலை 7 மணிக்கு சென்னை துறைமுகத்திலிருந்து மீன் இலாக்காவைச் சேர்ந்த "எம். எப். பு. மதுரூஸ்" என்னும் லான்சின் மூலமாக வைத்தெடுக்கும் மீன் பிடிப்போர்களையும், கெட்டுமரங்களையும் பின்னால்இணைத்து (Towing) மீன் இலாக்கா விசேஷ அதிகாரி ஈ. கே. மாதவன் பி. ஏ., அவர்களுடன் சென்னை மாகாண மீன் பிடிப்போர் சம்மேளன தலைவர் என். ஜீவரத்தினம் எம். பி. காசிமேடு மீன் பிடிப்போர் வாலிபர் சங்க தலைவர் எ. செல்வராஜன்; செயலாளர் எம். வேதாசலம், புதுமனை குப்பம் சங்கத் தலைவர் குரிமூர்த்தி; காரியதரிசி ஏ. ராசன் ஆகியோர்கள் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு சுமார் 20 மைலில் தூரத்திலிருக்கும் மீன் பிடிக்கும் இடம் (Fishing Grounds) பார்வை இட்டு, அதனுடைய ஆழத்தையும் கண்டுபிடித்தனர், அவ்விடத்தில் 4 அடி நீளமுள்ள மீன்களையும் பிடிக்கப்பட்டது. இதனால் மீன்பிடிக்கும் மக்களின் உழைப்பைக் குறைத்து ஊதியத்தையும் பெருக்கும் வகையிலும், நாட்டின் உணவு பஞ்சத்தை போக்கும் நிலையையும் மேலேறிப் பிட்டவர்களால் தெரிந்து கொள்ளப்பட்டது.

மா. மு. கழகம் சாத்தூர்-கிளை

சாத்தூர், ஜன. 17—

14-1-50 சனிக்கிழமை, பொங்கல் புதுநாளில் தி. மு. க. வீரம் மா உறுப்பினர் தோழர் வி. டி. நடராசன் அவர்கள் தலைமையில் மாணவர்கள் அனைவரும் கூடி, "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளை" நிறுவினர். கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கோ. புதுமைப்பித்தன், துணைச்செயலாளர்:—அ. அழகிரி, பொருள் உறுப்பினர்:—சோ. கி. நாதன். விளம்பர உறுப்பினர்:—பெ. வ. தம்பிதுரை எனவே செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. கழகத்தின் ஆக்க வேலையாக முதலில், "பாரதிதாசன் படிப்பகம்" ஒன்று நிறுவப்பட்டது.

நீங்கள் தனக்குத்தானே பேசிக்கொள்வதுண்டா?

பிரிட்டிஷ் பேராசிரியர் கூறும் விவரம்

"எப்போதாவது நீங்கள் தனக்குத்தானே பேசிக்கொள்வதுண்டா? அடிக்கடி ஞாபகமறதி ஏற்படுவதுண்டா? இவை ஏற்பட்டால் நீங்கள் பயப்படவேண்டாம். இவை மனிதர்களிடம் சாதாரணமாகக் காணப்படும் குறைபாடு" என்று ஒரு சர்வகலாசாலை பேராசிரியர் எட்வர்ட் ஏமக்பல் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:— எந்தவித காரணமுமின்றி மனிதனுக்கு இவ்வாறு ஏற்படுவதுண்டு. எவ்வளவு எவ்வளவு ஒருவர் புத்திசாலியாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு இம்மாதிரி திடீர் மாறுதல்கள் ஏற்படுவது சகஜம். ஆகவே இவைகளைக் கண்டு பயந்துவிடக் கூடாது.

இந்த மாதிரி பலவீனங்களில் இரு விதங்கள் உண்டு. அவை நல்ல வகை, கெட்ட வகை என்று கூறலாம். ஒரு காரியம் நடக்கிறது என்ற சமயத்தில் பீதி ஏற்பட்டதின் காரணமாக, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஒருவன் ஓடுகிறான், இது நல்ல பயமாகும். ஆனால் தன்னால் இக்காரியம் முடியுமா என்று பயந்து நடுங்குவது கெட்ட வகையாகும்.

பிரெஞ்சியாவில் வாக்கெடுப்பு

பிரெஞ்சிந்தியாவின் எதிர்காலம்பற்றி இந்தியக் குடியரசு சர்க்காருடனும் பிரெஞ்சு சர்க்காருடனும் நேரடியாகவேபேச்சு வார்த்தை நடத்தி முடிவுசெய்வதென்றும், அப்பிரதேசங்களில் வாக்கெடுப்பு வேண்டும் யோசனையைப் பிரெஞ்சு சர்க்கார் கைவிட்டு விட்டதென்றும் வெளியான செய்திகளைப் பிரெஞ்சு அரசு நாட்டிலுள்ள தூதாலய காரியாலயம் மறுத்திருக்கிறது.

புதுச்சேரிக்கு பிரான்ஸிலிருந்து திரும்பும் பிரெஞ்சு கமிஷனருக்கு வாக்கெடுப்பு நடத்துவது சம்பந்தமாக ஸ்தல ஸ்தாபனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும்படி உத்திரவிட்டிருப்பதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

சென்னையில் அம்மை நோய்

கடந்த சில வாரங்களில் சென்னையில் அம்மைநோய் அதிகரித்திருக்கிறது. 200 பேர் இந்நோயினால் பிடிக்கப்பட்டனர் என்றும், இதில் 26 பேர் மரணமடைந்தனர். என்றும் தெரிய வருகிறது. கார்ப்பரேஷன் சுகாதார அதிகாரிகள் இதுவரையும் 1,50,000 பேருக்கு அம்மைக் குத்தியுள்ளனர். அம்மை நோயால் தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். இந்நோய் பரவாமல் தடுக்க சுகாதார அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கோலாலம்பூர், பிப். 11—

மலேயாரப்பர் உற்பத்தியாளர் ஆராய்ச்சிக்கான 5 ஆண்டுதிட்டம் ஒன்றை வகுத்து அதற்காக ரூ. 400,00,000 செலவிட உத்தேசித்திருக்கின்றனர்.

வைத்திய வள்ளல் மறைவுக்கு நாடெங்கும் துக்கம்

நாகை

இவ்வூர் தி. மு. க. சார்பில் 8-2-50 அன்று தோழர் கே. இராதாமணாளன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்திய வள்ளல் ஈ. வெ. கி. அவர்களின் மறைவுக்கு வருத்தியும், அன்னார் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தாத்தையங்கார்பேட்டை

இவ்வூர் தி.மு. க. சார்பில் 6—2—50 அன்று தோழர் மு பெ முத்துக்கருப்பன் அவர்கள் தலைமையில் ஈ. வே. கி. அவர்கள் மறைவுக்கு வருந்தியும், அனுதாபம் தெரிவித்தும் தோழர்கள் எம்.எஸ். என். இராசன் முத்துக்கருப்பன். ஆகியோர் பேசினர்.

ஜமீன் ஆலமரத்துப்பட்டி

சென்ற 7—2—50 அன்று தி. மு. க. சார்பாக கழக மனையில் ஓர் அவசரக் கூட்டம் நிகழ்ந்தேறியது. அதுபோது அருமைப் பெரியார் ஈ. வே. கி. இயற்கை யெய்தியமைக்கு வருந்தியும், அன்னார் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

கடம்பூர்

இவ்வூர் தி. மு. க. சார்பில் 7—2—50 அன்று கழகமனையில் தோழர் வெ. மு. பொன்னுச்சாமி, அவர்கள் தலைமையில் வைத்திய வள்ளல் ஈ. வே.கி. மறைந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

வடக்கூர்—தூத்துக்குடி

5—2—50 அன்று தோழர் கே. வெற்றிவேல் அவர்கள் தலைமையில் இவ்வூர் கே. வி. அழகர்சாமி, ஞாபகார்த்த முன்னேற்றக்கழகத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடந்தது.

தோழர்கள் எஸ். ஜி. நேல்சன், எஸ். நடராஜன், வி. எம். ராஜன், எம். ரத்தினம், ஆகியோர் பேசினர். கூட்ட முடிவில் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்குவருந்தம் தெரிவித்தும், அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறது என தீர்மானிக்கப்பட்டது. செயலாளர் தோழர் எஸ். பி. சாமி நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

இராஜபாளையம்

ஈரோட்டுப் பெருந்தகையார் ஈ. வே. கி. அவர்கள் மறைந்தமை குறித்து ஓர் அவசரக் கூட்டம் இவ்வூர் தி. மு. க. சார்பில் 7-2-50 அன்று பெரியார் சதுக்கத்தில் தோழர் ம. பொன்னையா அவர்கள் தலைமையில் நிகழ்ந்தேறியது. பிறகு ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் முடிந்தது.

பெரியகுளம்

6—2—50 அன்று மாலை இவ்வூர் தி. மு. மா. க. செயற்குழு கூட்டம் கூடி, சீர்திருத்த செம்மல், ஈ. வே.கி. சம்பத் அவர்களின் தந்தை ஈ. வே.கிருஷ்ணசாமி அவர்கள் இயற்கையெய்தியதை ஒட்டி அவர் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்வதாகவும், வள்ளல் மறைவுக்கு வருந்துவதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரை

தி. மு. கழகம், தாமரைத்தொட்டி—நடராசன் கிளை—அப்படிப்பகம் ஆகியவற்றின் சார்பில், 5—2—5 அன்று காலை ஓர் செயற்குழுக் கூட்டம் நிகழ்ந்தேறியது.

ஈரோட்டு வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் இயற்கையெய்தியமை குறித்து இக்கூட்டம் வருந்துவதுடன், அவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறது" என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏழாயிரம் பண்ணை

8—2—50 அன்று தி. மு. க. சார்பில் தோழர் ராஜாமணி அவர்கள் இல்லத்தில், தோழர் ராமசாமி அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது மறைந்த வள்ளல் ஈ. வே. கி. அவர்கள் இயற்கை யெய்தியமை குறித்து வருந்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

காதலர் பாதையில்......!

எளிய நடையில் இனிய நற்கதைகள்

விலை 5 அணா.

விற்பனையாளர்க்கு 25% கழிவு

செலவு இனாம்.

தேவைக்கு முந்துங்கள்!

கலைச்செல்வ நிலையம்,

நயினியப்ப நாயக்கன் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை.

இனி நடப்பவை

சென்னை—அரசினர் கலைக் கல்லூரி, சக்கரவர்த்தி தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா, 13-2-50 திங்கள் மாலை 4-10 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். தோழர் டி. கே. சிதம்பரநாதனார் தலைமைவகிப்பார். தோழர்கள் பூ. ஆலாலசுந்தரனார், எம். ஏ., சா. கணேசன் சொற்பொழிவாற்றுவர். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் வில்லுப்பாட்டும் நடைபெறும்.

* * *

சென்னை:—புதுப்பேட்டை தி. மு. க. கிளையின் உறுப்பினர்கள் கூட்டமொன்று, 15-2-50 புதன் மாலை 6 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். உறுப்பினரனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

ஆற்காடு:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 14-2-50 மாலை 6½ மணிக்கு நடைபெறும். உறுப்பினரனைவரும் அழைக்கப் படுகிறார்கள்.

* * *

திருப்புவனம் (மதுரை) தி. மு. கழகத்துவக்கவிழா, 14—2—50 காலை 9 மணிக்கு நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தோழியர் சத்தியவாணிமுத்து

"என் உடல் நலனை முன்னிட்டு இன்னும் சில மாதங்களுக்கு எந்த கூட்டங்களிலும் கலந்து கொள்வதற்கில்லை, நண்பர்கள் எதற்கும் அழைக்காமலிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்." என தோழியர் சத்தியவாணிமுத்து அறிவிக்கிறார்.

கழகக்கொடி

திருக்கோவிலூர் வட்டத்தில் தி. மு. கழகத் துவக்க விழாவுக்கு 18"×20" அளவில் தி. மு. கழகக் கொடிகள் கீழ்க்கண்ட முகவரியில் (தணி உள்பட) இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்:— அ. கு. மாசிலாமணி நியூஸ் ஏஜண்ட், C/o க. ஏழுமலைவேலு. ஆடை வாணிபம் அரகண்டநல்லூர், தெ. ஆ. மாவட்டம்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1